# தலைப்பு: வாழ்வென்றால்...

- கலைவாணி இளங்கோ

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்னும் திருவள்ளுவரின் கூற்றுக்கேற்ப உலக நெறிமுறைகளைக் கடைபிடித்து வாழ்ந்து அனைவருக்கும் பயனுள்ளனவாக இருப்பவனை வானுலகத்தில் இருக்கும் தெய்வமாக மதிக்கப்படுக்கிறான். இவ்வாறு, தனக்கும் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் நன்மைகளைப் பயக்குமாறு வாழ்ந்து விட்டுப் போகிறவனின் வாழ்க்கைத்தான் சிறந்த வாழ்க்கையாகக் கருத்தில் கொள்ளலாம்.

முதலில், தனக்கு நல்ல ஆன்மாக விளங்க எப்படி வாழ வேண்டும் என்பதை சற்றுப் பார்க்கலாம். ஏதோ மண்ணில் பிறந்தவிட்டோம், வெந்ததைத் தின்றுவிட்டு வெட்டியாக இருந்துவிடக் கூடாது. குடும்பத்தில் மூத்த பிள்ளையாக இருந்தாலும் கடைசி பிள்ளையாக இருந்தாலும், நல்ல விழுமியங்களையும் பழக்க வழக்கங்களையும் கடைபிடித்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். தன்னால் யாருக்கும் தீங்கு வராமல் இருக்க வேண்டும். சமீபத்தில் நியூசிலார்ந்து துப்பாக்கிச் சூடு சம்பவம் எதை நமக்கு நினைவூட்டியது? ஒரு தனிப்பட்ட நபரின் ஆதங்கத்தாலும் கொள்கையாலும் நாம் பிறருக்கு இன்னல்களைக் கொடுக்க கூடாது. அப்படிக் கொடுத்தால் அது ஒரு சமூகத்தையும் நாட்டையும் பெரிதுமாகப் பாதித்துவிடும்.

அடுத்து, குடும்பத்திற்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செவ்வென செய்ய வேண்டும். பெற்றோரைப் பேணுதல் முதல், நம் வீட்டுப் பெண்களின் இலட்சியக் கனவுகளை நினைவேற்றும்வரை நாம் ,நம்மால் முடிந்த ஊக்கத்தையும் உற்சாகத்தைக் கொடுக்க வேண்டும். ஒரு தாய் மட்டும்தான் ஒரு குடும்பத்தை வழிநடத்த வேண்டும் என்ற அவசியமில்லை. குடும்பத்திலுள்ள அனைவருக்குமே தாய்மை உணர்வு இருக்க வேண்டும். அது அடுத்த தலைமுறையை வழிநடத்த துணைபுரியும். இதைத்தான் குறுந்தொகையில்,

நனை முதிர்
தாய்உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு
அன்னாய் என்னும் குழவி

என்று கூறப்படுகிறது. குறிப்பாக நம் நாட்டில் பெருகி வரும் மூத்தோர் எண்ணிக்கையை ஏற்றாற்போல் தொண்டூழியர்களும் பராமரிப்புத் துறை பணியாளர்களும் குறைவாக உள்ளனர். ஒரு தாயாக இருந்து நமது நாட்டின் முன்னோடிகளைத் தனிமரங்களாக விட்டுவிடக் கூடாது. இந்த மண்ணிற்குத் தங்களின் இரத்தத்தையும் வியர்வையும் சிந்தி நாட்டை உருவாக்கிய உன்னத உள்ளங்களின் கடைசி காலத்தைச் சரியாகக் கழிக்க நாம் உதவ வேண்டும். கடமையைச் செய்யாது கண்டா மிருகம் போல் பத்து கோண்டமீனியம் வாங்குவதில் என்ன பயன்?

இறுதியாக, நல்ல வாழ்க்கையை வாழ நாம் ஒரு நல்ல குடிமகனாக இருந்து நாட்டிற்கு நம்மால் முடிந்த உதவிகளைப் புரிய வேண்டும். தேசிய சேவை புரிவது, வருமான வரியைக் கட்டுவது போன்ற கடமைகளைவிட இன்னும் பல வழகளில் நாட்டிற்குப் பலம் சேர்க்கலாம். தண்ணீர், உணவு வளங்களை அளவோடு பயன்படுத்துவது, பொது இடங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வது, பிற நாட்டினர் நம்மிடம் உதவி கேட்டால் மனமுவந்து உதவி செய்வது, பணிப்பெண்களைச் சகமனிதர்களாக மதிப்பது போன்றவற்றைக் கடைபிடிக்கலாம்.

இவ்வாறு தனக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் நல்ல முன்மாதிரியாக விளங்கும் ஒவ்வொருவரின் வாழ்வும் இறப்பிற்குப் பின் சொர்கத்திலும் தொடரும்.